JAFFNA COLLEGE UNDERGRADUATE LIBRARY
15 JUL 1972

Registered as a News paper in Ceylon விலைசதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் : 389
தேசிய தினசரி
மலர் 14
இதழ் 155

யாழ்ப்பாணம் ஆனி 32 [illegible] சனிக்கிழமை (15-7-72)

மின்சாரத்திலும்,
மண்ணெண்ணெயிலும்
இயங்கக்கூடிய
எலெக்ட்ரோலக்ஸ்
ரிபிறிஜிறேற்றரும்
(Electrolex Refrigerator)
கிரவுண் றெக்கோட்
பிளேயரும்
விற்பனைக்குண்டு
றேடியோ
இன்ஜினியரிங் வேக்ஸ்
(பஸ்நிலையத்துக்கு பக்கத்தில்)
28, பஸார் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணத்தில் இன்று

கூட்டணியினர் - யூ. என். பி. தமிழ் எம். பி.க்கள் சந்திப்பு

பிலிப்பைன்ஸ்பண்ணை அதிபர் யாழ். விஜயம்

யாழ்ப்பாணம், சனி

தூரகிழக்கு நாடுகளின் மிகப்பெரிய கோழிப்பண்ணைகளில்ஒன்றான பிலிப்பைன்ஸ் லோறன்ஸோ கோழிப்பண்ணை உரிமையாளரும், மூலிய பொறுப்பாளருமான திரு என். ரி லோபீ லோறன்ஸோ யாழ்ப்பாணம் விஜயம் செய்தார்.

யாழ்ப்பாணம் சன்சைஸ் பாம்புறொடெக்டர் அதிபர் திரு. பி. கே. பொன்னம்பலத்தின் அழைப்பின் பேரில் திரு. லோறன்ஸோ அவரது பண்ணைக்கு விஜயஞ் செய்திருந்தார்.

சன்சைஸ் பாம் புறொடெக்ட் அதிபர் திரு. பி. கே. பொன்னம்பலம் பிலிப்பைன்ஸ் சென்றசமயம் இவர்களது பண்ணையில் தங்கியிருந்து அங்குள்ள வேலைத் திட்டங்களை நேரிற்பார்வையிட்டார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்த திரு. லோறன்ஸோ பல முக்கிய பிரமுகர்களையும், அரசாங்க உத்தியோகத்தர்களையும் சந்தித்து உரையாடினர்.

மாவை ஆலய உற்றவம்

யாழ்ப்பாணம், சனி

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. பல வருடங்களாகப் பிரச்சினைக்குள்ளான ஆலய உற்சவம் இவ்வருடம் அமைதியாக நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி ஆலயத்தில் சிறுபான்மைத் தமிழர் பிரவேசிக்க முயன்ற 68ம் ஆண்டு முதல் ஆலய உற்சவங்கள் பிரச்சினையுடன் நடைபெற்று வந்தன 68ம் 69ம் ஆண்டுகள் உற்சவங்கள் பிரச்சினைகள் மத்தியில் நடைபெற்ற போதும் 70ம் 71ம் ஆண்டுகள் உற்சவம் நடைபெறவில்லை. 70ம் ஆண்டு ஆலயத்தின் வெளி இரும்புக் கதவுகளில் பொலிசார் காவல் புரிந்ததால் உற்சவம் நடைபெறவில்லை.

இவ்வருட உற்சவம் ஒழுங்காக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முடிவைப் பொறுத்தே நாளை கலந்துகொள்வர்?

யாழ்ப்பாணம், சனி

யூ. என். பி. தமிழ் எம். பி.க்களுடன் தமிழர் கூட்டணியினர் இன்று பேச்சுவார்த்தை நடத்துவார்களென்றும், அதில் நல்ல முடிவு ஏற்பட்டபின்தான் அவர்கள் இருவரும் கூட்டணி நடவடிக்கையில் முழுக்க முழுக்க பங்குபற்றுவார்கள் என்றும் தெரியவருகிறது.

யூ. என். பி தமிழ் எம். பி.க்களான திரு. கே. டபிள்யு. தேவநாயகமும், திரு. எம். யூ. தம்பிராசாவும் இன்று காலை யாழ்ப்பாணம் வந்துசேருவார்கள்.

இவர்களுடன் கூட்டணி பிரமுகர்களான திரு. எம். எம் இராசமாணிக்கம், திரு மாணிக்கவாசகர் உட்பட மற்றும் கூட்டணி பிரமுகர்கள் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் எனத் தெரியவருகிறது.

இப்பேச்சுவார்த்தை பயனளித்தால் அவர்கள் இருவரும் யூ. என் பி.யிலிருந்து வெளியேறி கூட்டணி நடவடிக்கையில் முழுக்க முழுக்க கலந்துகொள்வார்களாம்.

சங்கானை 'மினி' கச்சேரி! ஜி. ஏ. திறந்துவைத்தார்

சங்கானை, வெள்ளி

சங்கானையில் "மினி" கச்சேரியை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா இன்று சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்

அவர் அப்போது பேசுகையில், அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டுள்ள இந்த முறையிலும் மக்கள் தமது கச்சேரி தொடர்பான வேலைகளை மிகச் சுலபமாக செய்துகொள்ள வசதியேற்பட்டுள்ளது என்றுர்.

மக்கள் நலன் கருதி அரசாங்கத்தால் வகுக்கப்பட்ட திட்டத்திற்கமைய ஒவ்வோர் காரியாதிகாரி பிரிவிலும் ஒவ்வொரு கச்சேரி திறக்கப்படவுள்ளது. முன்னோடியாக வலிகாமம் மேற்குப் பிரிவில் சங்கானையில் கச்சேரியும் சண்டிலிப்பாயில் காரியாதிகாரி காரியாலயமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த முறையில் இதுவரை நடைமுறையிலிருந்துவந்த அதிகாரங்கள் அவ்வப் பகுதிக் கச்சேரிகளுக்குப் பரவலாகப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

சங்கானை அரசடி வயிரவர் ஆலய முன்றலில் அரசாங்க அதிபர் வரவேற்கப்பட்டு வயிரவசுவாமியின் விசேட ஆராதனை பூசையில் பங்குபற்றியபின் மேளவாத்திய சகிதம் ஊர்வலமாக கச்சேரிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். வழி நெடுகிலும் சங்கானை பட்டின சபையினர் சங்கானை மக்கள் கமிட்டியினர் சங்கானை ப. நோ. கூ. சங்கத்தினர் ஆகியோர் மலர்மாலை அணிவித்து அரசாங்க அதிபரை வரவேற்றனர்

கச்சேரி முன்றலில் தேசியக் கொடியை அரசாங்க அதிபர் ஏற்றிவைத்தார்.

நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசிய உதவி அரசாங்க அதிபர் திரு சே. அருணாசலம் கச்சேரி செல்வனே இயங்கி இப் பகுதியை முன்னேற்ற மக்கள் ஒத்துழைப்புக்கொடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

வட்டுக்கோட்டைத் தொகுதி ஆகியின்ற உறுப்பினர் திரு ஆ. தியாகராசா பேசுகையில், நாடு நலம் பெற அடின உழைப்பும் பொருளாதார அபிவிருத்தியும் அவசியமென்றும் தமது கொள்கையின்படி நாம் இதுவரைவரை [illegible] களில் இருந்து மாறப் போவதில்லை என்றும் கூறினர்.

(5-ம் பக்கம் பார்க்க)

இந்துமாகடல்

அமைதிப் பிரதேசம்: 'அவசரம்' என்கிறுர் பிரதமர்

கொழும்பு வெள்ளி

இந்துமாகடல் பிரதேசத்தை விரைவில் அமைதிப் பிராந்தியமாகப் பிரகடனப்படுத்துவதற்கான உடன்படிக்கையை உருவாக்க வேண்டுமென்று பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இன்று வலியுறுத்தினார்.

பிரதம மந்திரியின் சமீபகால சர்வதேச [illegible] ரைப் பாராட்டுவதற்கு நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் பேசினர்.

இந்துமாகடல் பிரதேசத்தில் நிலவும் பதட்டநிலைமை கருத்தில் கொண்டு இப்பகுதியை விரைவில் அமைதிப்பிரதேசமாகப் பிரகடனப்படுத்த வேண்டியது அவசியம் என்று பிரதமர் குறிப்பிட்டார்.

குண்டு தயாரிக்க முயற்சி சந்தேக நபர் கைது

யாழ்ப்பாணம், சனி

எறிகுண்டுகள் தயாரிப்பதற்குத்தேவையான பொருட்களை வைத்திருந்ததாகக் கூறப்படும் ஒரு நபரை பொலிசார் கைது செய்துள்ளனர்

நீராவியடியில்வைத்து இவர் கைதுசெய்யப்பட்டார். உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திருச்சிற்றம்பலம் தலைமையில் சார்ஜன்ட் [illegible] மற்றும் கான்ஸ்டபிள்களுடன் சென்ற பொலிஸ்கோஷ்டியே மேற்படி சந்தேகநபரைக் கைது செய்தது.

டைனமைட்டுகள், அமிலப் போத்தில்கள் ஆணிகள் [illegible]

[5-ம் பக்கம் பார்க்க]

நியூ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 10-00
சனி ஞாயிறு பி. ப. 2-30
ஜெமினி கணேசன்
சௌகார் ஜானகி
நடித்த
காவியத் தலைவி

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி 6-30 இரவு 9-45
சனி ஞாயிறு 2-30
சிவாஜி — ஜெயலலிதா
நடித்த
பார் மகளே பார்

ராணி எம்.ஜி. ஆர் சரோஜாதேவி
(யாழ்ப்பாணம்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
தாயைக் காத்த தனயன்

ராஜா எம். ஜி ஆர் - பானுமதி
(யாழ்ப்பாணம்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
மதுரை வீரன்

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ ஜெய்சங்கர்
★ ரவிச்சந்திரன்
சௌகார்ஜானகி வாணிஸ்ரீ நாகேஷ்
மற்றும் பலர் நடித்த
கே. பாலச்சந்தரின் மற்றுமோர்
வெற்றிப்படைப்பு
நான்கு சுவர்கள்

லிடோ (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-00 பி. ப. 2-00,
மாலை 6-00 இரவு 9-30
எம் ஜி. ஆர். — சரோஜாதேவி
நடித்த
பணத்தோட்டம்

வெகுவிரைவில்
சிவாஜி — சரோஜாதேவி
நடித்த
அருணோதயம்

5:வது வாரமாக காட்சியளிக்கிறார்
வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00
சனி, ஞாயிறு காலை 10-30
★ சிவாஜி ★ ஜெயலலிதா
★ பாலாஜி ★ நிர்மலா
★ சோ ★ கருணாநிதி ★ தேங்காய் சீனிவாசன்
மற்றும் பலர் நடித்தது
ஜேயார் மூவீஸ்
எங்க மாமா
(ஈஸ்ட்மென் வர்ணச் சித்திரம்)

வரி விளம்பரம்

சாப்டிங்ஸ் தொடக்கம் 7 அங்குலம் வரைக்கும் (M. S. Shafting) வேண்டிய அளவுகளில் மலிவாகக் கிடைக்கும் ராஜா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 4853

தேவை

கணக்கியலில் அறிவுள்ள காசாளர் தேவை. 30 வயதுக்குட்பட்டவர், பிணை ரூ. 2,000 ரொக்கம். C/o "ஈழநாடு", யாழ்ப்பாணம்; 4872

சாந்தி சங்கானை
தினசரி 6-30, 9-30
ஞாயிறு 2-30
முத்துராமன்-விஜயா
சந்திரபாபு-பேபிராணி
நடித்த
கண்ணே பாப்பா

சனி மாலை 4- 15
KILL THEM ALL &
COME BACK ALONE
"எல்லோரையும் கொலை
செய், வெற்றியோடு
திரும்பி வா."
(சண்டைகள் நிறைந்த
படம்)

வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
சிவாஜி - பத்மினி
நடித்த
இரு மலர்கள்

தினசரி மாலை 4-30
Christopher Lee
in
DRACU HAS RISEN
FROM THE GRAVE

REGAL (Jaffna)
Daily 5-15 & 7-15 p m.
Jean Marais
and
Mylene Demogeot
in
FANTOMAS
(Color)

தினசரி பி. ப. 2-00
இரவு 9-45
ரவிச்சந்திரன்
ஜெயலலிதா
நாகேஷ்
நடித்த
மகராசி

MANOHARA
Jaffna
Daily 4-45, 7 & 9-45 pm
Sat. Sunday 10-30
Victuria Vetri
in
WHEN DINOSAURS
RULED THE EARTH
(Technicolor)

பவானி சினிமா
மூளாய்
தினசரி 6-30 இரவு 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி-பத்மினி
நடித்த
திருவருட்செல்வர்

யாழ் தியேட்டர்
(காங்கேசன்துறை)
தினசரி 6-30 இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-சரோஜாதேவி
நடித்த
இருவர் உள்ளம்

வாடகைக்கு

யாழ்ப்பாணம் மக்கள் வங்கிக்கு எதிரில் மூன்று அறைகளைக்கொண்ட சகல வசதிகளுமுடைய மேல் மாடி வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு: யாழ் மோட்டோர் ஸ்டோர்ஸ், 110, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 4860

வைத்தியம்

யாழ் ஹோமியோபதி கிளினிக்: சகல நாட்பட்ட நோய்கள், சரும நோய்கள், குழந்தைகளுக்கான நோய்கள், மன நோய்கள் முதலிய நோய்களுக்கு விசேட சிகிச்சை அளிக்கப்படும். டாக்டர் பரமசிவம், 25, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். 4864

வைத்தியன்

வடஇலங்கை ஹோமியோபதி சங்கத்தின் முத்திங்கள் வெளியீடு, ஹோமியோபதி டாக்டர்களின் படைப்பாலும் பிரசுரமாகும். வருட சந்தா ரூபா 5/-. விளம்பரங்களுக்கும் விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளவும். 131, நாவலர்வீதி, (ஐந்து சந்தி) யாழ்ப்பாணம். 4873

கல்வி

பாடசாலை செல்லும் மாணவர்களுக்கும், உத்தியோகத்தர்களுக்கும் மாலை 4-7 மணிவரையும், மற்றோர்க்கு காலை வகுப்புக்களும் நடக்கின்றன. உடன் சேர்ந்து படிக்கவும். வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை. 4867

விற்பனைக்கு

ஒன்றரை வயதுடைய 'கிரேட்டேன்' ஜெர்மன் நாய்க்குட்டி, விலை 400 ரூபாய். 318, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 487

விளையாட்டு விழா

உடுப்பிட்டி, வியாழன்

வல்வெட்டி வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் 10-வது ஆண்டு விழாவும் வருடாந்த விளையாட்டுப் போட்டியும் ஆகஸ்ட் மாதம் 19ம்- 20-ம் திகதிகளில் நடைபெறவுள்ளன. இதன் போது மரதன் ஓட்டம் சைக்கிளோட்டம், இறீக்கம்பம் ஏறுதல் போன்ற விளையாட்டுக்களும் இடம்பெறுவதுடன் இறுதிநாளன்று நாடக விழாவும் நடைபெறும்.

யாழ் - திருமலை நாளை மோதும்

யாழ்ப்பாணம், சனி

திருமலை உதைபந்தாட்டத் தெரிவுக்கோஷ்டி இன்று யாழ்நகர் வருகின்றது. இக்கோஷ்டி நாளை யாழ். உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டியுடன் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஓர் சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் மோதுகின்றன.

யாழ். கோஷ்டிக்கு வீரர் எம். பி. கோமேந்திரன் தலைமைதாங்குவார்.

தெல்லிப்பழை ஐக்கிய வைத்தியசாலைச் சங்கம்

தேவை

1. இராக்காவலாளர்- வயது 45க்கு மேற்படாத, தமிழில் வாசிக்க எழுதத் தெரிந்தவராய் இருத்தல் வேண்டும். ஆங்கில அறிவும், மின்சார அறிவும் முன்னைய இராணுவ பொலிஸ் உத்தியோகத்தர் விரும்பத்தக்கது.
2. அலுவலக சேவகர் (Peon) - வயது 18-25, J. S. C. அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தி பெற்றவராயிருத்தல் வேண்டும். ஆங்கில அறிவும் விரும்பத்தக்கது.

சமீபத்தில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் 23-7-72 பிற்பகல் 4-00 மணிக்கு முன் விண்ணப்பிக்கவும்.

த. சிவலிங்கம்,
கௌரவ காரியதரிசி.
13-7-72 4296

வருடாந்த ஆராதனை

யாழ்ப்பாணம், சனி

இலங்கை பெந்தெகொஸ்தே சபையினது வருடாந்தக் கன்வென்ஷனும் தெய்வீக சுகமளிக்கும் ஆராதனைகளும் பருத்தித்துறை பழைய தபாற்கந்தோருக்கு அண்மையில் அமைக்கப்பட்ட பந்தலில் ஆரம்பமாகியுள்ளது. இம்மாதம் 13ம் திகதி ஆரம்பமான இவ்வாராதனை 16ம் திகதிவரை தினமும் மாலையில் தொடர்ந்து நடைபெறும். மற்றக் கூட்டங்கள் விசுவாச வீட்டில் காலையும் மாலையும் நடைபெறும்.

கொழும்பு, வெள்ளி

இலங்கையிடமிருந்து டயர்களையும் டியூப்களையும் வாங்கிக்கொள்ள இந்தியா முன்வந்துள்ளது.

இந்திய வர்த்தகக் கூட்டுத்தாபனத்துக்கும் இலங்கை அதிகாரிகளுக்குமிடையே நடைபெற்ற பேச்சுக்களின் போது இந்தியா இதைத் தெரிவித்துள்ளது. இப்பொருட்களை இந்தியா எந்த அளவில் வாங்கிக்கொள்ளும் என்பதுபற்றி இனிமேல்தான் முடிவு செய்யப்படும்.

கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்

மூளாய், சுழிபுரம்.

18-6-72ல் நடைபெற இருந்த மேற்படி சங்க 33-வது வருடாந்தப் பொதுக்கூட்டம் தவிர்க்கமுடியாத சில காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டது. இக்கூட்டத்தை விரைவில் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றதென்பதை அங்கத்தவர்களுக்கு அறிவிக்கின்றோம்.

4185 தலைவர்

பாரிஸ் சமாதானப் பேச்சுவார்த்தை:

நிக்ஸனின் அமைதித்திட்டம்: வடவியட்னும் மீண்டும் நிராகரிப்பு

யு. எஸ். நேபாம்குண்டு வீசுவதாகக் கண்டனம்

பாரிஸ், ஜூலை 14 அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸனின் வியட்னும் அமைதித் திட்டத்தை வடவியட்னும் தூதுக்குழு புறக்கணித்து விட்டது.

கடந்த இரு மாதங்களாக இடைப்பட்டிருந்த பாரிஸ் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாகியது. இப்பொழுது அமெரிக்க அதிபரின் அமைதித் திட்டத்தை பாரிஸ் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் வடவியட்னும் தூதுக்குழுவின் தலைமைப் பிரதிநிதி புறக்கணித்துள்ளார்.

நிக்ஸனின் திட்டம் நியாயமற்றதும், ஆபத்தானதும் என்று வர்ணித்த அவர், உண்மையில் அமெரிக்கர்கள் வியட்னுமில் அமைதித் தீர்வுகாண விரும்பினால் வடவியட்னும் மீது அமெரிக்கக் குண்டுவீச்சை நிறுத்த வேண்டும் என்றார்.

அமெரிக்கா கருத்து

வடவியட்னும் தலைமைப் பிரதிநிதியின் கருத்து மிகவும் கண்டிப்பானது. பாரிஸ் சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்கு உற்சாகம் தருவதாக இல்லை என அமெரிக்க வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கண்டனம்

வட வியட்னும் நகரங்கள் மீது மற்றும் இடங்களிலும் அமெரிக்க விமானங்கள் நேபாம், போஸ்பரஸ் குண்டுகளை வீசி வருவதாக வடவியட்னும் அமெரிக்கா மீது குற்றஞ் சாட்டியுள்ளது. வடவியட்னும் மீதமட்டுமல்ல தென் வியட்னுமிலிருக்கும் தேசிய முன்னணி விடுதலைப் படையினரின் நிலைகள் மீது இன்றைய அமெரிக்க விமானங்கள் வீசி வருவதாக ஹனுய் குற்றஞ் சாட்டியுள்ளது.

தென் வியட்னும் மாகாணத் தலைநகரான குவான் ட்ரியில் தென். வியட்னும் துருப்புக்கள் மீது விடுதலைப் படையினர் மீண்டும் புதிய தாக்குதல்களை ஆரம்பித்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வட அயர்லாந்தில்

நடவடிக்கைகளை நிறுத்த தடையான ஐரிஷ் ராணுவம் முடிவு

லண்டன், ஜூலை 13 வட அயர்லாந்தில் மீண்டும் நடவடிக்கைகளை நிறுத்திவைக்க முன்வருவதாக தடைசெய்யப்பட்ட ஐரிஷ் குடியரசு ராணுவத்தின் பிராந்தியப் பிரிவு அறிவித்துள்ளது. ஆனால் போர் ஓய்வை பிரிட்டிஷ் ராணுவம் மீறமாட்டாதென உத்தரவாதம் கொடுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் கோரியுள்ளனர்.

நேற்று புரட்டஸ்தாந்த இறிஞ்தலர்கள் ஆயிரக் கணக்கானவர்கள் நடத்திய ஊர்வலமும் ஆர்ப்பாட்டமும் எதுவித அசம்பாவிதமும் இன்றி முடிவுற்றது. ஆனால் வேறுபல இடங்களில் வைத்த குண்டு வெடிப்புகளும் கலவரங்களும் இடம் பெற்றன. புதிதாக வந்து சேர்ந்துள்ள பிரிட்டிஷ் துருப்புகள் ஊர்வலத்தில் போனவர்களுக்கு பாதுகாவலாக நின்றனர்.

லண்டன்டெரிநகரில் பல இடங்களில் குண்டுகள் வெடித்தன பலர் காயமடைந்ததாகக் கூறப்பட்டது. பெல்பாஸ்ட் நகரில் ஒருவர் கொல்லப்பட்டார் இன்னொரு நகரில் கார் ஒன்றில் இருவர் சுடுபட்டுக் கொல்லப்பட்டார்.

பலாலி விமானநிலையத்தில் அகப்பட்டது

படுக்கை விரிப்புக்குள் யந்திர உபகரணங்கள்!

மாவிட்டபுரம், வெள்ளி படுக்கை விரிப்புக்குள் மறைத்து கண்ணாடிப் பாத்திரங்கள் தயாரிப்பதற்கு உதவும் யந்திர உபகரணங்களைக் கடத்தி வந்தவருக்கு சுங்க இலாகா அதிகாரி 1000 ரூபா அபராதம் விதித்ததுடன் பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டது.

திருச்சியிலிருந்து விமானமூலம் பலாலி விமானநிலையத்தை வந்தடைந்த ஒரு நபரை சுங்க இலாகா அதிகாரி திரு. எஸ். கார்த்திகேசு சோதனையிட்ட சமயம் அவர் வைத்திருந்த படுக்கை விரிப்புக்குள் பல ஆயிரம் ரூபா பெறுமதியான இயந்திர உபகரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டது. அவர் விசாரணை செய்யப்பட்டு சுங்க அதிகாரிகள் பிரஸ்தாப நபருக்கு 1000 ரூபா அபராதம் விதித்ததுடன் பொருளையும் பறிமுதல் செய்தனர்

ஒரு பெண் ஒரு சேலைக்குள் டிரான்சிஸ்டர் ரேடியோ ஒன்றை மறைத்து தனது பையில் வைத்து வந்த சமயம் சுங்க இலாகா அதிகாரியிடம் சிக்கிக்கொண்டார்.

விசாரணையின் பின்னர் 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டு பொருளும் பறிமுதலானது.

……

ஜனநாயகக் கட்சியின்

உப ஜனாதிபதி வேட்பாளராக மிசோரி செனட்டர் தெரிவு!

நியூயோர்க், ஜூலை 14 ஜனநாயகக் கட்சியின் உப ஜனாதிபதி வேட்பாளராக மிசோரி செனட்டர் தோமஸ் ஈகிள்டன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

செனட்டர் எட்வர்ட் கென்னடி உபஜனாதிபதி பதவிக்கு போட்டியிட மறுத்ததினால் திரு. ஈகிள்டன் தெரிவு செய்யப்பட்டார்.

திரு. கென்னடியை உப ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த ஜனாதிபதி வேட்பாளர் திரு. மக்கவர்ன் எடுத்த கடைசி முயற்சியும் தோல்வி அடைந்தது குடும்பத்தைப் பார்க்கவேண்டும். என்று காரணத்தினால் கென்னடி தனது மறுப்பைத் தெரிவித்து வந்தார். அவரது உணர்ச்சியை தம்மால் புரிந்து கொள்ள முடிவதாக மக்கவர்ன் தெரிவித்தார்.

இதன்பின்பே மிசோரி செனட்டரின் பெயரை மக்கவர்ன் தெரிவுசெய்தார். 42 வயதுடைய செனட்டர் தோமஸ் ஈகிள்டன் ஒரு ரோமன் கத்தோலிக்கராவர். இவர் நாட்டில் பிரபலமானவரல்ல. ஆனால் ஜனநாயகக் கட்சியின் நீண்டகால உறுப்பினரான இவர் ஜனநாயகக் கட்சியின் கொள்கையில் உறுதியுடன் இருந்ததோடு வியட்னும் பிரச்சினையில் ஒருதெளிவான கொள்கையுடையவராக இருப்பவர்.

அடுத்த நவம்பரில் நடைபெறவிருக்கும் அதிபர் தேர்தலில் திரு நிக்ஸனை எதிர்த்துப் போட்டியிடுவதற்கு செனட்டர் மெக்கொவர்னை ஜனநாயகக் கட்சி தெரிவுசெய்துள்ளது. கடைசியாக திரு மெக்கொவனுக்கும் ஜாக்ஸனுக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் செனட்டர் மெக்கொவன் வெற்றி பெற்றிருக்கிறார்.

மியாமி பீச்சில் நடைபெற்ற ஜனநாயகக் கட்சியின் மகாநாட்டில் செனட்டர் மெக்கொவர்ன் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டார். மகாநாட்டில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி இத்தேர்தலில் ஜனநாயகக் கட்சி வெற்றி பெற்றால் இந்தோசீனுவிலுள்ள அமெரிக்கப் படைகள் யாவும் முற்றாக விலக்கிக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காசியாவில் தொடர்ந்தும் இப்போதைய கொள்கையே கடைப்பிடிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

திருட்டுப்போன சைக்கிள் பிடிபட்டது

ஊர்காவற்றுறை, வெள்ளி ஐந்து ஆண்டுகளுக்கு முன் பாணந்துறையில் காணமற்போன சைக்கிள் பிடிபட்டது

கோவில் திருவிழா பார்ப்பதற்காக மூவர் சைக்கிள் வண்டியில் சென்றபோது ரோந்து சுற்றிய பொலிஸைக் கண்டதும் மூவரும் சைக்கிள் வண்டியை விட்டுவிட்டு ஓட்டம் பிடித்தனராம். இச்சம்பவம் வேலணையில் நடைபெற்றது.

பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட இச் சைக்கிள் வண்டியை ஒப்பிட்டுப்பார்த்தபோது இவ்வண்டி பாணந்துறையில் காணமற்போன சைக்கிள் எனத் தெரியவந்தது:

சிம்லாஉடன்பாடு

விநோபாஜி பாராட்டு

புதுடில்லி, ஜூலை 14 பாரத பாகிஸ்தான் சிம்லா உடன்பாட்டுக்கு பூதான இயக்கத்தலைவர் விநோபாஜி பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இந்த உடன்பாடு இருநாடுகளிடையே அமைதியை ஏற்படுத்துவதற்கு ஆரம்பப்படி என்று குறிப்பிட்ட விநோபாஜி இரு நாடுகளும் ஆயுத உற்பத்தியைக் குறைக்க வேண்டுமென்றும் இரு நாடுகளின் வெற்றி இந்த உடன்பாட்டை எந்த அளவில் செயற்படுத்துவது என்பதிலேயே தங்கியுள்ளதாகவும் அறிவித்தார்.

அனலைதீவு, வெள்ளி அனலைதீவு ஐயனார் ஆலய உற்சவம் இம்மாதம் 16ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது அன்று பகல் அன்னதானமும் இரவு விசேஷ மேளக்கச்சேரியும் அருணா குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சியும் சுவாமி ஸ்ரீ சிதானந்த யோகியின் சொற்பொழிவும் கோலாட்டமும் செல்வி இந்திரா கணபதிப்பிள்ளையின் இசை விருந்தும் இடம் பெறும்.

இந்திய துறைமுகங்களில் ரஷ்ய கப்பல்களுக்கு இடம்!

செய்திக்கு இந்திரா மறுப்பு

புதுடில்லி, ஜூலை 14 சோவியத் யூனியன் கடற்படைக் கப்பல்கள் இந்தியத் துறைமுகங்களைப் பயன்படுத்த இந்தியா அனுமதித்துள்ளதென்ற செய்தியை இந்தியப் பிரதமர் திருமதி காந்தி மறுத்துள்ளார்.

ஆஸ்திரேலிய வானொலிக்கு அளித்த பேட்டியில் இம்மறுப்பை திருமதி காந்தி தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், இந்த சமுத்திரம் அமைதியாக இருக்க வேண்டுமென்பதே இந்தியாவின் உறுதியான கொள்கை. இப்பிரதேச அமைதியை எவ்வல்லரசுகளும் கெடுக்கும் நடவடிக்கைக்கு இந்தியா அனுமதியாது என்றும் அவர் கூறினார்.

பதிவுக்கட்டணம் ரூ.10 அதிகரிப்பு

அல்லைப்பிட்டி, வெள்ளி ஆயுர்வேத வைத்தியர்களைப் பதிவு செய்வதற்கான பரீட்சைக்கட்டணம் பதினைந்து ரூபாவிலிருந்து இருபத்தைந்து ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அரசாங்க ஆயுர்வேத வைத்தியசபை அறிவித்துள்ளது.

'சீனிஉற்பத்திக்கு வடக்கே அதிக வாய்ப்புண்டு'

குருநகர், வெள்ளி

வடபகுதியில் ஒரு சீனித் தொழிற்சாலை நிறுவுவதற்கு வசதியும் மூலப் பொருளும் இருக்கின்றதென்ற உண்மையை யாரும் மறுக்க முடியாது. 2-ம் யுத்தகாலத்தில் பருத்தித்துறைப் பகுதியில் உள்ள பொலிகண்டி என்ற இடத்தில் ஆங்கிலேயரால் ஒரு சீனித் தொழிற்சாலை உண்டாக்கப்பட்டது. அந்த நேரத்தில் அப்பகுதி மக்களின் ஆதரவு இல்லாததால் அந்தத்தொழிற்சாலை தொடர்ந்து இயங்க முடியாதநிலை ஏற்பட்டது'.

இவ்வாறு வேலணை பனம்பொருள் விற்பனை நிலையத் திறப்புவிழாவில் உரையாற்றிய பண்டிதர் ஆ பொன்னுத்துரை தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது!

பனம்பொருள்களைச் சீவியம் நடத்திய காலம் ஒன்று இருந்தது. இன்றுதான் நாம் பல இறக்குமதி உணவுகளைக் கண்டிருக்கிறோம். அன்று பனங்கழியிலும், கருப்பநீரிலும் வெவ்வேறு விதமான சீனியை பொலிகண்டியில் தொடங்கிய சீனித் தொழிற்சாலையில் ஆங்கிலேயர் செய்யத் தொடங்கினர். அதற்குத் தேவையான கருப்பநீரை அப்பகுதி மக்கள் கொடுக்காததாலும் கருப்பநீரில் தொழிலாளர்கள் தண்ணீரைக் கலந்து கொடுத்த காரணத்தாலும் பொலிகண்டி சீனித்தொழிற்சாலை மூடப்பட்டது. அத்தொழிற்சாலை இன்று இருந்திருந்தால் வடக்கின் நிலை வேறாக இருந்திருக்கலாம்.

இன்றும் எமது உற்பத்திப் பொருட்கள் இடையில் மறைந்து போவதற்குக் காரணம் அவை ஒரேதரமாக இல்லாமல் கலப்படமாக இருப்பதுதான். உணவுப் பொருட்களிலும் மற்ற வகைகளிலும்கூட ஒன்று கலப்புச்செய்து சிலர் விற்பனைக்கு விடுகின்றனர். இதனால் அப்பொருட்களின் சக்தியும் தன்மையும் தரமும் குறைகின்றது. இதன்பின் அந்த உற்பத்தியே அழிந்து விடுகின்றது. எனவே கலப்பில்லாத பல உணவுப் பொருட்களை நாமே எமது நாட்டில் உற்பத்தி செய்ய முடியும்";

நெடுந்தீவு படகு சேவை

தகுந்தபடகை ஈடுபடுத்த அமைச்சருக்குக் கோரிக்கை

யாழ்ப்பாணம், சனி

"குறிகாட்டுவானிலிருந்து 6 மைல் தூரம் மட்டுமே தொலைவிலுள்ள நெடுந்தீவுப் போக்குவரத்துச் சேவை சீர்கேடாக இருப்பது எமது ஜனநாயகக் குடியரசுக்கே வெட்கக்கேடாகும். இப்போக்குவரத்துச் சேவைக்குப் பொறுப்பான சில உத்தியோகத்தர்களே வேண்டுமென்று இச்சேவையில் நாசகார வேலைகளைச் செய்கிறார்களென்ற வதந்தியை அரசு நீக்க ஆவன செய்தல்வேண்டும். இப்பகுதிக்கு சீரான படகுசேவைகள் நடைபெறத் துரித ஒழுங்குகளை நெடுஞ்சாலை மின்சக்தி அமைச்சர் மேற்கொண்டு துரதிர்ஷ்டசாலிகளான நெடுந்தீவு மக்களின் துயரைத் தீர்த்தல்வேண்டும்".

இவ்வாறு நெடுந்தீவு கிராமசபை அக்கிராசனர் திரு ஆ அம்பலம் நெடுஞ்சாலை மின்சக்தி அமைச்சர் திரு மைத்திரிபால சேனநாயகாவுக்கு அனுப்பியுள்ள தந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் அத்தந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது!

"கடந்த பத்துநாட்களாக நெடுந்தீவு படகுசேவை தடைப்பட்டுள்ளதுடன் கடைசி மூன்று நாட்களாக நாளுக்கு ஒருதடவை மட்டுமே அரசாங்க லோஞ்சு சேவையில் ஈடுபட்டுள்ளது.

சேவையின்போது அரிசி, மாவுமூடைகள் பெருமளவில் அரசினரின் கவனிப்பு இன்றி மக்களுடன் ஏற்றிச் செல்லப்படுகின்றது. கடல் கொந்தளிப்பான இந்நிலையில் இவ்வாறு பொருட்களை ஏற்றிச்செல்வதில் மக்களின் உயிருக்கு எந்நேரமும் அபாயம் ஏற்படக்கூடியதாக உள்ளது. ஆகவே நெடுந்தீவு-குறிகாட்டுவான் போக்குவரத்துக்குத் தகுந்த படகைச்சேவையில் ஈடுபடுத்த ஆவன செய்க";

லாலா சோப் ஸ்தாபனத்தாரின்
கரபந்தாட்ட சுற்றுப்போட்டி
இன்று சனிக்கிழமை மாலை
6-30 மணிக்கு ஆரம்பமாகின்றது
விபரங்களுக்கு:
லாலா சோப்
தொழிற்சாலை
அச்சுவேலி.

இன்றைய பலன்

ஆனி மாதம் 32ம் திகதி
15-7-72

மேஷம்: உறவுமுறைகள் பலப்படும் உற்சாகம் பெருகும். புதியநண்பர்கள் புடைசூழ்வர்.

ரிஷபம்: வெற்றிப் பாதையில் வீறுநடைபோடுவர். எதிரிகள் மத்தியில் ஏற்படும் மனமாற்றம் உங்கள் செல்வாக்கை வளர்க்கும்.

மிதுனம்: பொதுத்துறையில் நாட்டம் பிறக்கும் மக்களின் ஆதரவு கிடைக்கும் பொன்னான நாள்.

கடகம்: உறவுமுறையினர் வெறுப்புஏற்படும். வணிகவாரத்தின் மூலம் பணம் தோன்றலாம்.

சிம்மம்: துன்பத்தின்ரேகைகள் நிழலாடிடப் போகும். துணைவரின் உடல்நலம் கெடும் பணச்செலவுமுண்டு.

கன்னி: இன்னலின் பின்னலால் இதயம் வேதனைப்படும் வீட்டில் வைத்தியச் செலவுகள் அதிகரிக்கலாம்.

துலாம்: கல்வித்துறையில் முன்னேற்றமுண்டு தாய்வழி ஆதரவுதாராளமாக கிடைக்கும்.

விருச்சிகம்: சிந்தனை அலைகள் மோதும். செய்தொழில் பற்றிட நிலை தென்படும். பணச்செலவுமுண்டு.

தனுசு: பொன்னான சந்தர்ப்பம் இன்று கிடைக்கும் திறமைக்குமுதலிடம்உண்டு. இதயச்சுமை அகலும்.

மகரம்: மனதில் அமைதி குன்றும், எதிரிகள் ஏக்கமுறுவர் மறைந்தநினைவுகள் மீண்டும் தலைதூக்கும்.

கும்பம்: குழந்தைகளினால் மகிழ்ச்சியுண்டு கணவன் மனைவி மத்தியில் அன்பு தவழும்.

மீனம்: செய்தொழில் தளர்ச்சி ஏற்படும் பிரயாணத்தை தவிர்க்கவும் சதிவேலைகள் நடைபெறுவதற்கு இடமுண்டு. இறைவழிபாடு நன்று.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

15—7—72 சனி

(செய்திகள் காலை 6-15 பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

காலை 6-15 நாதாஞ்சலி 6-20சைவநற்சிந்தனை ஆத்மநாதசர்மா, 6-25 இந்தியநற்சிந்தனை இசாக்.செல்லரத்தினம், 6-40 அறிவிப்புகள். 6-50 காலமிர்தம். 7-00 பண்ணும் பரதமும். 7-30 மகாணச்செய்திகள். 7-35 வாத்திய விருந்து. 7-45 பாட்டு பத்மினி திவாகரன். 8-15 இன்னிசை கீதம்.

மாலை 6-10 அறிவிப்புகள் 6-15 மெல்லிசை, 6-30இசைமஞ்சரி, 6 45 அரங்கேற்றம் (கர்நாடகஇசை) 7-00 கிராமமுன்னேற்றம் சுடர்த்தரங்கு, 7-35 விவேகச் சக்கரம் இல.20 தயாரித்தளிப்பவர்: எஸ்.கே.பரராசசிங்கம் 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-10 அறிவிப்புகள், 9-20 விளையாட்டுத்துறைச் செய்திகள் தொகுத்தளிப்பவர்: சி.சண்முகம்; 9-30 நாடகம் எழுதியவர்: சி.சரவணபவன், தயாரிப்பு: கே. எம். வாசகர், 10-00இசைச்செல்வம், தொகுத்தளிப்பவர்! கே. எம். ராஜா.

யாழ்ப்பாணத்தில் நடந்த ஆயுர்வேதபரீட்சைமுடிவு

யாழ்ப்பாணம், சனி

வடஇலங்கைச் சுதேசவைத்திய சபையார் யாழ்ப்பாணம் இலங்கா ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில் சென்ற ஏப்ரல்மாதம் நடைபெற்ற வருடாந்தப் பரீட்சையில் சித்தியடைந்தோரின் பெயரை வெளியிட்டிருக்கிறார்கள்.

இறுதிவருடப் பரீட்சை ஆயுள்வேதத் திணைக்களத்தால் நடத்தப்பட்டது.

இறுதிவருடம்

கே இந்துமதி என் பிலோமினா எஸ் விஜயதாரகி ஏ மேறிகிரேஸ் ஆர் மங்கையாம்பிகை அம்மாள் எஸ் ஜெயமலர் எஸ் பத்மாவதி ஆர் சௌபாக்கியலெட்சுமி ரி நாகேஸ்வரி ஜி திலகநாயகம் ரி பாலரத்தினம் எஸ் குகதாசப்பிள்ளை எஸ் சர்வேஸ்வரன்

மூன்றும் வருடம்

எம் சரோஜினிதேவி 1ம் பிரிவு கே உமாதேவி 2ம் பிரிவு எஸ் இந்திராணி 2ம் பிரிவு எஸ் நிமலாவதி 2ம் பிரிவு ஆர் தேவநாயகி எஸ் அமிர்தபூபதி ஆர் தமிழ்ச்செல்வி

இரண்டாம் வருடம்,

பி புஷ்பராணி - முதலாம் பிரிவு வி சாந்தகுமாரி - முதலாம்பிரிவு வி கமலாதேவி - முதலாம் பிரிவு

ஆர் பாலசுப்பிரமணியம் -2ம் பிரிவு ஏ பரம்சோதி - 2ம் பிரிவு கே நவரத்தினம் - 2ம் பிரிவு எஸ் இராசமலர் - 2ம் பிரிவு வி வீரசிங்கம் 2ம் பிரிவு ஆர் தனகோபாலன் - 2ம்பிரிவு எம் புனிதவதி - 2ம் பிரிவு கே நடேசன் - 2ம் பிரிவு

முதலாம் வருடம்

எஸ் இரஜனி 1ம் பிரிவு ஆர் கேதீஸ்வரி 1ம் பிரிவு வி இராமமூர்த்தி 2ம் பிரிவு ச நிர்மலா ராஜகுமாரி 2ம் பிரிவு எஸ் ஜமுனாதேவி 2ம் பிரிவு ரி இராஜேஸ்வரி 2ம் பிரிவு வி சம்பூரணராணி 2ம் பிரிவு எஸ் செல்வராணி 2ம் பிரிவு எஸ் லோகசாம்பாள் 2ம் பிரிவு எஸ் சத்தியமூர்த்தி 2ம் பிரிவு ஏ கோடீஸ்வரன்

திருப்பணி வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், சனி

கன்னாகம் சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் திருப்பணி வேலைகள் ஆரம்பித்துள்ளன. பெப்ரவரியில் நடைபெற்ற திருக்கூட்டத்தில் இக்கோவிலின் புனருத்தாரணம் செய்து மகாகும்பாபிஷேகம் நடத்துவதென கோவில் முகாமையாளர்கள் தீர்மானித்துள்ளனர். இதற்கான பூர்வாங்க நடவடிக்கையாக கடந்த திங்கள் பாலஸ்தாபன அபிஷேக வைபவம் நடைபெற்றது.

மலையகத்தில் கவிதை நூல் வெளியீடு

புசல்லாவை, வெள்ளி

புசல்லாவை இலக்கிய வட்டம் கவிஞர் க. திருச்செல்வம் எழுதிய "கனவுப் பூக்கள்" என்ற கவிதை நூல் இம்மாதம் 16-ம் திகதி காலை வெளியாகிறது. நம்பொடை வேவன்டன் அரசினர் தமிழ் வித்தியாலயத்தில் நம்பொடை தமிழ் வித்தியாலய அதிபர் திரு. வ. முத்துசிவஞானம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. என். சுப்பிரமணிய ஐயர், திரு. ஏ. சி. பொன்னுத்துரை, பண்டிதர் ச. வே. பஞ்சாட்சரம், திரு. க. கலா பரமேஸ்வரன், கவிஞர் ச. அமிர்தநாதர், திரு. ஏ. வி. முருகேசன், ஜனாப் எம். எம். அப்துல் மஜீத், திரு. சி. நவரத்தினம், திரு. சி. வி. மாரிமுத்து ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்.

மேயர் வாழ்த்து

குருநகர், வெள்ளி

"ஒருநாட்டின் பண்பு, கலை கலாச்சாரம் ஆகியவற்றின் சக்தியே அந்நாட்டின் சக்தியாகும், இச்சக்தியை தேசியத்துடன் இணைத்துச் செயல்படுத்த வேண்டியது நமது கடமையாகும்"

இவ்வாறு குருநகர் கலையரங்கு திறப்புவிழாவையொட்டி யாழ்.நகர முதல்வர் திரு. அல்பிரட் துரையப்பா விடுத்த ஆசிச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

புதிய சமாஜம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள கள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒன்று சேர்ந்து ஒரு சமாஜத்தை உருவாக்கியுள்ளன.

சென்றவாரம் "வீரசிங்கம்" மண்டபத்தில் வைத்து யாழ். மேலதிக கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. கே. சண்முகலிங்கம் சமாஜத்தைத் தொடக்கி வைத்தார்.

கோவில் திருட்டு

கரவெட்டி, வெள்ளி

துன்னாலை கோவிற்கடவை விநாயகர் ஆலயத்தில் சுமார் 2000 ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளனவாம். இதுபற்றி நெல்லியடி பொலிசார் புலன்விசாரணை செய்கின்றனர். இப்பகுதியில் திருட்டுக்கள் அதிகரித்து வருகின்றது. சில வீடுகளிலும் திருட்டுக்கள் நடைபெற்றதாக பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகள் செயல்கமிட்டி மீண்டும் முதல்வரை சந்திக்கும்

சென்னையில் 1340 பேர் விடுதலை

சென்னை, ஜூலை 14
தமிழ்நாட்டில் விவசாயிகள் கிளர்ச்சியை நடத்தி வரும் தொழிற் சங்கங்களின் செயல் கமிட்டி தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு கருணாநிதியை மீண்டும் இம்மாதம் 18-ம் திகதி சந்தித்துப் பேசவிருக்கின்றது.

விவசாயிகளின் கோரிக்கைகள் பற்றி இச்செயல் கமிட்டி நேற்றிரவு 8 மணி வரையில் முதல்வருடன் ஆலோசனைகள் நடத்தியது.

செயல் கமிட்டியுடன் செய்துகொள்ளப்பட்ட சமரசத்திற்கிணங்க கடந்த 5-ம் திகதி மறியல் செய்ததற்காகக் கைதுசெய்யப்பட்டு குற்றவாளிகள் இதன்மீது தண்டனை பெற்றிருந்தவர்கள் ஆகிய அனைவரையும் விடுதலைசெய்யும்படி தமிழ்நாடு அரசு உத்தரவிட்டிருக்கின்றது. குற்றச்செயல்களுக்காகக் கைதுசெய்யப்பட்டவர்கள் மாத்திரம் விடுதலைசெய்யப்படமாட்டார்கள். சென்னையில் கைதுசெய்யப்பட்டிருந்த 1340 பேரும் விடுதலைசெய்யப்பட்டுவிட்டதாகப் பொலிசார் அறிவித்தனர்.

தமிழ்நாட்டில் கடந்த 5ம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக ஆராய்வதற்காக புதுடில்லியில் இருந்து வந்துள்ள காங்கிரஸ் கமிட்டிக் குழு மதுரைவந்து சேர்ந்துள்ளது.

சிம்சன் கம்பனிதொழிலாளர் கிளர்ச்சியின்போது கொல்லப்பட்ட தி. மு. க. தொழிற்சங்கத் தலைவர் திரு பிரதாபச்சந்திரன் மரணம் குறித்து கைதுசெய்யப்பட்ட ஆர் குசேலர் என்ற தொழிற் சங்கவாதி உயர் நீதிபதி ஒருவர் முன்னிலையில் ஆஜர் செய்யப்படவிருக்கிறார். தலைமறைவாகியிருந்த இவர் கடந்த 6-ம் திகதி சென்னை ஜூனியர் மாஜிஸ்திரேட் முன் சரணடைந்தார்.

சிம்சன் கம்பனித் தகராறு பற்றி தொழிலாளர் நல அமைச்சர் திரு நடராஜன் கம்பனி நிர்வாகிகளோடும் ஊழியர் பிரதிநிதிகளோடும் தனித்தனியே பேச்சுக்கள் நடத்தியிருக்கின்றார். ஆனால் கம்பனியைத் திறப்பது பற்றி எதுவித முடிவும் ஏற்படவில்லையென்று தெரிகின்றது.

கம்பியூட்டர்மூலம் ஆசிரிய நியமனம்

கொழும்பு, வெள்ளி
கம்பியூட்டர் மூலம் ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படவிருக்கிறது. கல்வி அமைச்சர் இத்தகவலை நேற்று வெளியிட்டார். அகில இலங்கை ஆசிரிய சங்கங்களின் ஆலோசனைச் சம்மேளனம் ஒன்பது கோரிக்கைகள் சம்பந்தமாக சந்தித்தபோது அவர் இத்தகவலை வெளியிட்டார்.

ஆசிரிய நியமனங்களிலும் பதவிஉயர்வுகளிலும் ஊழல்கள் மலிந்து இடம்பெறுவதாக ஆசிரியசங்கத்தினர் அமைச்சரிடம் சுட்டிக் காட்டினர்.

சான்றுன் போக்கட்டி கொலை வழக்கு

கைமோசக் கொலையென எதிரி ஒப்புக்கொண்டார்

யாழ்ப்பாணம், சனி
சான்றுன் போக்கட்டி கொலைவழக்கில் எதிரிக்கு 5 வருட கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. எதிரி கைமோசக் கொலைக் குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து நீதியரசர் தீர்ப்பு வழங்கினார்.

வடபகுதி அசைஸ்கோர்ட்டில் நீதியரசர் ஜெயபத்திரானா முன்னிலையில் நேற்று முன்தினம் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ் வழக்கில் சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த சான்றுன்போக்கட்டியில் மாணிக்கன் கந்தசாமி என்பவர் சமரன் இடியனை கொலை செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் அட்வகேட் ஆர். ஈ. தம்பிரத்தினமும் அரசாங்க தரப்பில் அட்வகேட் குமார் அமரசேகரவும் ஆஜரானார்கள்.

குண்டு..

[1ம் பக்கத்தொடர்ச்சி]
கள் மற்றும் கைக்குண்டு தயாரிப்பதற்குத் தேவையான பொருட்களும் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது

கதிரிப்பாய் கொலைவழக்கு

“வாருன் சுடடா’ என்ற குரல் கேட்டபின் சூடு விழுந்தது”

யாழ்ப்பாணம், சனி
'மரவள்ளித்தறையில்நாங்கள் சென்றுகொண்டிருந்தபோது 'வாருன் சுடடா' என்ற குரல் கேட்டது. அம்மா அந்தப் பக்கம் 'டோர்ச்லைட்' அடித்தார். அப்பொழுது நான் 3 எதிரிகளையும் கண்டேன். முதலாமெதிரி என்தலையை பக்கத்திற்கு டோர்ச் லைட் ஆக 2-ம் 3-ம் எதிரிகள் கட்டார்கள்; அவர்களிடம் இரு துப்பாக்கிகள் இருந்தன. 3 வெடிச்சப்தம் கேட்டது. உடனே 'ஐயோ' என்று கதறியபடி ஐயா நிலத்தில் விழுந்தார்'

கதிரிப்பாய் கொலைவழக்கு நேற்று வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஜெயபத்திரானா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ்வழக்கில் நேற்று சிறுவன் கே: அருணாசலம் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினான்.

இவ்வழக்கில் 23 6-70-ல் கதிரிப்பாயிலுள்ள முத்துலிங்கம், சி இரத்தினவடிவேல், எஸ் சோமரத்தினம் ஆகியோர் கதிர்காமு கந்தையாவைக் கொலைசெய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1-ம் 3-ம் எதிரிகள் சார்பில் அட்வகேட் ஜே பி செரிபும்; அட்வகேட் ஆர் ஈ தம்பிரத்தினத்தின் உதவியுடன் புறக்டர் ஆர் ஜே செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். 1 ம், 3 ம் எதிரிகளுக்காக அரசாங்கதரப்பில் புறக்டர் ஆர் பி சபாரத்தினம் நியமிக்கப்பட்டிருந்தார்.

2-ம் எதிரி சார்பில் அட்வகேட் ஆர். ஈ. தம்பிரத்தினம், புறக்டர் ஆர் ஜே செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். 2ம் எதிரிக்காக அரசாங்கத்தால் புறக்டர் கே குணரத்தினம் நியமிக்கப்பட்டிருந்தார். அரசாங்கதரப்பில் அட்வகேட் குமார் அமரசேகரா ஆஜரானார்.

கே அருணாசலம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது' இறந்துபோன என் தகப்பனார் 2ம் எதிரிக்குச் சொந்தம். 1 ம், 3-ம் எதிரிகள் ஒரேவீட்டில் வசித்து வந்தார்கள்; சம்பவம் நடந்ததினம் நான் பாடசாலைவிட்டு வந்தேன். வீட்டில் தகப்பனார் இருந்தார். நான் உடைகளை மாற்றினேன். அம்மாவும் வீட்டில் இருந்தார். தகப்பனார் சாப்பிட்டபின் தோட்டத்திற்குச் சென்றார். நானும் அம்மாவும் தோட்டத்திற்குச்சென்றோம். தகப்பனுடன் இராசுவும் தோட்டத்தில் இருந்தார். தோட்டத்தில் கிணறு இருக்கிறது. மெஷினால் தண்ணீர் இறைப்பது வழக்கம். தண்ணீர் இறைத்தபின் மிஷின் கடையில் வைக்கப்படும்'

தோட்டத்திலிருந்த வாளியில் டோர்ச் இருந்தது. ஐயா விஷ்க்கத் தூக்கிக்கொண்டு கடைக்கு போனார். நானும் அம்மாவும் பின்னால் போனோம். அப்போதுதான் சூடு விழுந்தது ஐயா தலையில் சூடுவிழுந்ததும், 3 எதிரிகளும் ஓடிவிட்டனர். எதிரிகளை அதற்கு முன் கண்டிருக்கிறேன்

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

மாவைக்கந்தன்—

6-ம்பக்கத் தொடர்ச்சி
பெரும்பான்மை சமூகத்தினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதனால் மேலும் இருவர் பலியானதோடு, கலவரங்கள் பல்வேறு இடங்களிலும் ஆரம்பித்தன. இதன்காரணமாக கொடிகாமம் நெல்லியடி அச்சுவேலி நிச்சாமம் ஆகிய இடங்களில் பொலிஸ் போஸ்ட்கள் நிறுவப்பட்டன.

வடபகுதியிலுள்ள சிறுபான்மைத் தமிழர்கள் இரு தலைமையின் கீழ் இயங்கிவந்தனர். திரு எம் சி சுப்பிரமணியம் தலைமையின்கீழ் சிறுபான்மைத் தமிழர் மகாசபை என்ற பெயரிலும், திரு எஸ். டி. நாகரத்தினம் தலைமையில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் என்ற பெயரிலும் இயங்கிவந்தனர்

மாவிட்டபுரத்தில் 26-7-68ல் ஏற்பட்ட சம்பவம், கலவரப் போக்கில் புதிய ஒரு நிலையை ஏற்படுத்தியது 1957 ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு சட்டத்தின்மூலம் தடைகளை அகற்ற பொலிசாருக்கு உரிமை உண்டென்றும் அட்டோர்னி ஜெனரல் அறிவித்திருந்தார் இதனால் சில கோவில்கள் எவ்வித பாகுபாடுமின்றி சகலருக்கும் திறந்துவிடப்பட்டது.

உத்தரவு நிராகரிப்பு

பிரபல்யம்வாய்ந்த கோவில்களான மாவிட்டபுரம் கந்தசாமிகோவில், செல்வச் சந்நிதி, அச்சுவேலி பிள்ளையார் கோவில், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் மற்றும் சில கோவில்கள் அட்டோர்னி ஜெனரலின் உத்தரவை ஏற்கமறுத்து கோவில்களைப் பூட்ட முடிவு செய்தனர்

இவ்விஷயமாக திரு வி சுந்தரலிங்கம்மீது மல்லாகம் நீதிமன்றத்தில் சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச் சட்டத்தின்கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, விசாரணையின் பின் 100 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது அபராதத்தைக் கட்ட மறுத்து அவர் அப்பீல் செய்தபோது சுப்பிரீம் கோர்டு, அத்தீர்ப்பை ஊர்ஜிதம் செய்தது அதன்பின் அவர் சுப்பிரீம் கோர்ட்டிற்கு அப்பீல் செய்தார் 1671 ம் ஆண்டு பிரிவிக் கவுன்சில், சுப்பிரீம் கோர்ட்டின் முடிவை ஊர்ஜிதம் செய்தது

1969-ம் ஆண்டு மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் பிரதம குருக்களுக்கும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்குமிடையில் எந்தவிதமான சமாதானம் ஏற்படுவதற்கும் திரு வி சுந்தரலிங்கம் தடையாக இருந்துவந்தார் 1970ம் ஆண்டு பிரதம குருக்களுக்கு, திரு வி சுந்தரலிங்கத்திற்கும் இடைக்கால தடை உத்தரவு வழங்குமாறு கோரி அட்டோர்னி ஜெனரல் வழக்குத் தாக்கல் செய்திருந்தார் யாழ்ப்பாண மாவட்ட நீதிபதியால் இருவர்மீதும் இடைக்கால தடை உத்தரவு வழங்கப்பட்டது ஹரிஜனர்கள் உள் செல்வதைத் தடுக்கும் முகமாக கோவில் கதவுகளை மூடக்கூடாதென அத்தடை உத்தரவில் கூறப்பட்டிருந்தது கோவில் நிர்வாகிகள் இச்சட்டத்தின் பிடியிலிருந்து தப்புவதற்கு அவ்வருடம் கோவில் திருவிழாக்களை ரத்துச்செய்து கோவில் கதவுகளைப் பூட்டினார்கள்.

பிரதமர் நடவடிக்கை

பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தீர்மானப்படி 3 பேர் கொண்ட குழு ஒன்றுதெரிவு செய்யப்பட்டது. இக்குழு சமூகஏற்றத்தாழ்வுஒழிப்புச் சட்டத்திற்கு திருத்தங்கள் கொண்டுவர சிபார்சு செய்தது 1971-ம் ஆண்டு சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு சட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் ஆகஸ்ட் மன்றத்தில் நிறைவேற்றப்பட்டன. இதன் பின் வடபகுதியில் பிடிவாதமாக இருந்த சில சைவர்கள் மனதில் திடீர் மாற்றங்கள் ஏற்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. [illegible] களில் உள்ள கோவில்களும் ஹரிஜனர்களுக்குத் திறந்துவிடப்பட்டது. தேநீர்க்கடைகள், சலவைத்தொழிற்சாலைகள், சிகை அலங்கரிப்பு நிலையங்களிலும் பாகுபாடுகாட்டப்படுவது நிறுத்தப்பட்டது.

திரு. வி. சுந்தரலிங்கம், இதன்பின்னர், [illegible] அத்துமீறிப் பிரவேசித்ததாகவும், வடபகுதி பொலிஸ் அதிபருக்கும் மற்றும் 13 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில், தனிப்பட்ட வழக்கை தாக்கல்செய்தார். இவ்வழக்கு விசாரணை முடிவு பெறவில்லை;

பிரிவிக்கவுன்சில் அப்பீலால் தோல்விகண்டபின்னர் திரு. வி. சுந்தரலிங்கம், தாமாகவே மாவிட்டபுரம் பகுதியிலிருந்து 71-ம் ஆண்டு டிசம்பர் மாதம் வெளியேறிவிட்டார் இதன்பின் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் நிர்வாகி துரைச்சாமிக்குருக்கள் பொலிஸ் அதிபருடன் தொடர்பு கொண்டபின் வெளிப்படுத்தாமல் அமைதியான முறையில் கோவில் கதவுகளை திறந்து நாளாந்த பூசைகளை நடாத்தினார் ஆசாரசீலர்களாகவும் எவரும் உள்ளே சென்று வழிபட வசதிசெய்யப்பட்டது எவ்வித பாகுபாடுமின்றி பக்தர்கள் வழிபட்டுவருகின்றனர்.

வழக்கத்திலும் பார்க்க இவ்வருடம் கூடுதலான யாத்திரிகர்கள் மாவிட்டபுரம் நோக்கி அணிவகுப்பாக செல்வார்கள் போராட்டத்திற்காகவல்ல வழிபாட்டிற்காக!

சங்கானை

[1-ம் பக்கத்தொடர்ச்சி]
சங்கானைப் பட்டினசபைத் தலைவர் சி. வயிரமுத்து, காரியாதிகாரி திரு எம். நடராசா மற்றும்பலர் பேசினர்.

புதிய வைத்திய அதிகாரி

யாழ்ப்பாணம், சனி
யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரியாக திருமதி அம்பிகை துரையப்பா பதவியேற்றுக் கொண்டார்.

மணிவாக்கு

துவேஷத்தை அன்பினாலும் அதிசயத்தை சத்தியத்தினாலும், ஆத்திரத்தை சகிப்புத் தன்மையினாலும் மட்டுமே வெற்றிகொள்ள முடியும்.

— மகாத்மா காந்தி

ஈழநாடு
Eela Nadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna.
Post Box: 49 Jaffna Telephone: 389

[illegible] பரிதாபி வருஷம் ஆனி மாதம்
32-ம் திகதி (15-7-72)

கம்பியூட்டர் கடைசி மருந்தா?

"சுவாமி, பைபிள் பிரசங்கம் எத்தனை நூற்றாண்டுகளாக நடைபெற்று வருகின்றது? அதன் மூலம் மனிதன் எவ்வளவு தூரம் திருந்தியிருக்கிறான் என்பதைச் சொல்லுவீர்களா?" விரக்தியடைந்த வாலிபன் ஒருவன் பாதிரியாரின் மலைப் பிரசங்கத்தின் நீண்ட வியாக்கியானத்தைக் கேட்டு அலுப்புத் தொட, சாய்ந்த முகத்துடன் இக் கேள்வியைக் கேட்டான் என்று ஒரு கதை உண்டு. "தண்ணீர் உலகந்தோன்றிய காலம் தொட்டு இருக்கின்றது. இருந்தும் உனது முகத்தின் நிலையை உணர்ந்தீரா?" என்று உடன் பதிலாகக் கேட்டாராம் அந்தப் போதகர்.

கடந்த அரசாங்கம் விசேஷமாக கல்வி அமைச்சு நாட்டிலுள்ள ஆசிரிய சங்கங்களையும் ஆசிரிய சமூகத்தையும் எவ்வளவு அவமதித்து நடந்ததென்பது நாடறிந்ததே. ஆசிரிய சங்கப் பிரமுகர்களையும் ஆசிரிய தொழிற் சங்கத் தலைவர்களையும் வேலை நீக்கம் செய்தும், பதவி உயர்ச்சி மறுத்தும் அநியாய இடமாற்ற உத்தரவின் மூலம் அஞ்ஞாதவாசம் விதித்தும் இம்சைப் படுத்தியது கல்விக்குப் பாதகமாய் முடிந்தது. இவற்றைத் தாங்கொணா ஆசிரிய சமூகம், "குருதிக் கண்காட்சி" ஒன்றை அமைத்து தங்களின் இன்னல்களையும், கல்விக்கு நடந்த பேராபத்தையும் பகிரங்கமாகப் பிரலாபித்தது.

இன்றைய அரசு பதவிக்கு வந்ததும் ஆசிரியர்கள் பெறும் நன்மைகளையும் நீதியையும் எதிர்பார்த்தார்கள். கல்வி அமைச்சும் எடுத்த எடுப்பிலேயே வேலைநீக்கம் முதலிய அநீதிகளுக்கு ஆட்பட்ட ஆசிரியர்களுக்கு மீண்டும் வேலை அளித்ததுடன் மற்றும் குறைபாடுகளையும் கூடியளவு நிவர்த்தி செய்தது.

ஆனால் இன்றைய நிலை என்ன? பழையகுருடி கதவைத் திறவடி என்றுபோகிறதெனலாமா? ஆசிரியர் நியமனங்களிலும் பதவி உயர்வுகளிலும் ஊழல்கள் மலிந்து இடம்பெறுவதாக அகில இலங்கை ஆசிரியர் சங்கங்களின் ஆலோசனைச் சம்மேளனம் இரண்டு தினங்களுக்கு முன் கல்வி அமைச்சரைச் சந்தித்து முறையிட்டிருக்கின்றது. இந்த சம்மேளனப் பிரமுகர்களில் ஒருவர் திரு. [illegible] ஆசிரியர்களின் உரிமைகளுக்காக வாதாடி கடந்த அரசாங்கத்தால் வேலைநீக்கம் செய்யப்பட்டவர். இன்றைய கல்வி அமைச்சு அவருக்கு நீதி வழங்கியது மட்டுமல்லாமல் அவரைப் பொறுப்பான ஆசிரிய சமூகத் தலைவரென்று கணித்துமிருக்கின்றது. அமைச்சர் சம்மேளனச் சந்திப்பில் திரு. [illegible] ஆசிரிய நியமனங்களைப் பிடித்து திடுக்கிடும் தகவல்களைத் தெரிவித்தாரென்று செய்தி கூறுகிறது. ஆசிரியர்களாகவும் அதிபர்களாகவும் தகுதியற்றவர்களை நியமித்த அநீதியை ஆட்சிமன்றத்திலும் கடந்த அரசின் காலத்தில் பல கட்சித் தலைவர்கள் காரசாரமாகக் கண்டித்திருந்தார்கள். திறமை, நேர்மை, கடமையுணர்ச்சியுள்ள ஆசிரிய மணிகளை ஒதுக்கிவிட்டு, செல்வம், செல்வாக்கு அரசியல் போன்ற தலையீட்டால் தகுதியற்றவர்கள் நியமிக்கப்பட்டதால் நாட்டில் கல்விமுறை கேடு தலைதூக்கியிருப்பதாக திரு. [illegible] குறிப்பிடுகிறார். இந்த அரசாங்கத்தை ஆதரிக்கும் பிரமுகர்களே இவ்வாறு முறையிடுவதைக் கொண்டு நிலைமை இன்னும் மோசமென்றே நாம் கருதவேண்டியுள்ளது.

கல்வியின் தரத்துக்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் ஆசிரியன் அச்சாணி போன்றவன். அரசியல் தலையீட்டால் திறமையையும் நேர்மையான சேவையையும் புறக்கணிப்பதாயின் அது ஆசிரிய உலகத்தையும் ஆசிரிய தொழிலையும் சீர்கெடுக்குமென்பது திண்ணம். இதை உற்று நோக்குங்கால் இது ஒரு தீராத நோய் போலிருக்கின்றது. இதன் விளைவால் பிரசித்தி பெற்ற கல்லூரிகளும் திறம்பட நடைபெற்ற பல்வேறு பாடசாலைகளும் தரமிழந்த அரசியல் வாதிகளுக்கோ அல்லது அதிகாரத்தினருக்கோ அடிவருடு உயர்ச்சி பெறும் [illegible] ஆசிரியர்கள் அதிபர்களின் கல்வி நிர்வாகச் சீர்கேட்டினால் தாழ்ந்த நிலையடைந்திருப்பதை மக்கள் மறக்கமாட்டார்கள்.

ஆசிரிய சம்மேளனத்தின் நீண்ட பிரலாபத்தைக் கேட்ட கல்வி அமைச்சரே விசனப்பட்டு கடைசி முறையில் கம்பியூட்டர் தான் இனி நமக்குத் தஞ்சமென்ற பதிலை அளித்திருக்கிறார். அன்பு, நியாயம், தர்மம் என்ற முறைகளிலிருந்து மனிதன் தவறியதால் இனிமேல் யந்திரந்தான் எங்கள் புகலிடம். மருந்தால் மாறாத வருத்தம், சத்திரசிகிச்சையால் சொஸ்தம் மாறும். 'வெட்டு ஒன்று துண்டு இரண்டு' என்பார்கள். ஆயினும் நாமஞ்சுவது ஒன்றுண்டு, யந்திரத்தையும் தம்வசப்படுத்தும் பேர் இந்த ஊழல் வியாபாரிகள் என்பதே அந்த அச்சம்!

மருந்தால் மந்திரத்தால் மாறாத நோய் கம்பியூட்டர் என்னும் யந்திரத்தால் மாறக்கூடுமென நம்புவோம்.

ஐந்துவருட தலையிடி தீர்ந்தது

மாவைக் கந்தன் ஆலயத்தில் பாகுபாடின்றி வழிபாடு!

— கா. யோகநாதன்

ஐந்து வருடங்களாக நடந்த பல்வேறு வகையான போராட்டங்களின் பின் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் சகல மக்களுக்கும் பாகுபாடின்றி திறந்துவிடப்பட்டுள்ளது. ஆசார சீலர்களும் எவரும் இனிமேல் மாவிட்டபுரம் கோவிலுக்குள் செல்ல முடியும். அதற்கு எவ்வித தடையும் இல்லை.

நாளை கொடியேற்றத்துடன் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகிறது. இவ்வருடம், சிறுபான்மைத் தமிழர்கள் உட்பட ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள், திருவிழா வைபவங்களில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

காங்கேசன்துறை தொகுதியில் உள்ள பாடசாலை மாணவர்கள் சென்றவாரம் கோவிலில் உள்ள புல்பூண்டுகளை அகற்றி சுத்தம் செய்துள்ளனர். இவ்வருடம் பெருமளவில் வியாபார நிலையங்களும் இடம் பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கோவிலுக்குச் செல்லும் வழியில் தண்ணீர்ப் பந்தல் அமைப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. போக்குவரத்து ஒழுங்கை வழமை போல் பொலிசார் கவனித்து வருகின்றனர். சுகாதாரப்பகுதியினர் சுகாதார ஒழுங்குகளை கவனித்து வருகின்றனர்.

நெஞ்சங்கள் மறக்காது

கடந்த ஆண்டுகளில் அங்கு நடந்த சம்பவங்களை எவரும் இலகுவில் மறந்துவிட முடியாது. இவ்வருடம் எவர் மனதையும் புண்படுத்தாத விதத்தில் ஒரு நல்ல முடிவு ஏற்பட்டுள்ளது.

தேசவழமைச் சட்டமும் ஆகமமும் இடங்கொடுக்காததினால் பிறிவுக்கவுன்சில் தீர்ப்புவரும்வரை பிரமஸ்ரீ துரைச்சாமி குருக்களும் மற்றும் [illegible] மாவிட்டபுரத்திற்குள் ஹரிஜனர்கள் செல்வதை எதிர்த்து வந்தனர். பாகுபாடின்றி கோவிலை சகலருக்கும் திறந்துவிடும்படி அரசாங்க ரீதியாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் பலனளிக்கவில்லை.

1967ம் ஆண்டு முன்னாள் வவுனியா எம். பி. திரு. சி. சுந்தரலிங்கம், மாவிட்டபுரம் பிரதம குருக்கள் பிரமஸ்ரீ துரைச்சாமி குருக்களின் பிரதம ஆலோசகராவார். இதன் பின் ஆலயப்பிரவேச இயக்கம் வலுவடைந்தது.

1968ம் ஆண்டில் பிரபல சைவப்பிரமுகர்களான திரு. எம். வைரமுத்து, திரு. அம்பிகைபாகன், டாக்டர் பசுபதி, திரு. இ. ரத்தினநாதன், டாக்டர் வி. நல்லநாதன், காலஞ்சென்ற நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராசா, திரு. எம். ஸ்ரீகாந்தா, திரு. சிவசுப்பிரமணியம் ஆகியோர் அடிக்கடி வடபகுதியில் ஒன்றுகூடி நீண்டகாலப் பிரச்சினையை விவாதித்து கோவில் நிர்வாகத்தினருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். இதன் பயனாக சில கோவில்கள் ஹரிஜன மக்களுக்கு திறந்துவிடப்பட்டது. மாவிட்டபுரம் கோவில் விஷயமாகவும் இவர்கள் ஆலோசனை நடத்தினார்கள்.

சுந்தரர் தலையீடு

மாவிட்டபுரம் கோவிலின் சார்பில் 1968ம் ஆண்டு திரு. சி. சுந்தரலிங்கம் நேரடியாக தலையிட்டபோது ஆலயப் பிரவேச பிரச்சினை உச்சக்கட்டத்தை அடைந்தது. அவர் மாவிட்டபுரம் கதவுகளைப் பூட்டி வெளி மண்டபத்தை சுற்றி முள்ளுக் கம்பிகள் அடித்தார். கோவிலின் சகல வாசல்களிலும், தொண்டர்படையினர் நிறுத்தப்பட்டனர். இவர்கள் ஹரிஜனர் உட்செல்வதைத் தடைசெய்துவந்தனர். இதனால் உணர்ச்சிவசப்பட்ட சுமார் 300 ஹரிஜனர்கள் 3-7-68ல் கோவில் வாசலில் சத்தியாக்கிரகம் செய்தனர் இதனால் ஹரிஜன மக்களுக்கும் கோவில் தொண்டர் படையினருக்குமிடையில் மோதல் ஏற்பட்டது. பொலிசார் தலையிடவேண்டிய நிலையேற்பட்டது. கண்ணீர் புகை! புகைக்குண்டுகள் அடிக்கப்பட்டதுடன் குண்டாந்தடியடி பிரயோகமும் நடந்தது. பெரும் மோதலைத் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை பொலிசாரால் எடுக்கப்பட்டது.

துரைச்சாமி குருக்களும் திரு சி சுந்தரலிங்கமும், எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளால் இந்துமக்கள் மத்தியில் பிரிவினைகள் தோன்றியது. இதன் காரணமாக கொடிகாமம், அச்சுவேலி, நெல்லியடி, கரவெட்டி சங்கானை ஆகிய இடங்களில் சாதிக்கலவரங்கள் நடந்தன. இக்கலவரங்கள் காரணமாக இந்த இடங்களில் 1968ம் ஆண்டு சுமார் 16 பேர்கள் உயிரிழந்தனர்.

68ம் ஆண்டு ஜூன் மாதம் பெரும்பான்மை சமூகத்தவர் வாழும் பகுதியால் சென்ற ஹரிஜனரின் மரண ஊர்வலத்தை நோக்கி கிடுகு வேலிக்குள் மறைந்துநின்ற

(5-ம் பக்கம் பார்க்க)

இறுதிக் கிரியைகள்

பிரசித்த நொத்தாரிசு பொ. நா. நடராசா

[illegible] காலஞ்சென்ற [illegible] நாகலிங்கம் நடராசா அவர்களின் பூதவுடல் இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு இறுதிக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படுமென்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

4188 திருமதி கிருஷ்ணகுமாரி நடராசா

மரண அறிவித்தல்

வேதாகம சித்தாந்த சபை காரியதரிசியும் இளைப்பாறிய ஆசிரியரும் கல்வளை தர்மகர்த்தாக்களில் ஒருவருமான சண்டிருப்பாய் கல்வளை வாசியுமாகிய திருவாளர் செல்லையா சோமசேகரம் 14-7-72 வெள்ளிக்கிழமை காலை சிவபதமடைந்தார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 15-7-72 சனிக்கிழமை நண்பகல் 12-00 மணியளவில் சங்கம்புலவு மயானத்தில் நடைபெறும். 4297

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] 68-ம் இலக்கத்திலுள்ள [illegible] அச்சகத்தில் 1972-ம் ஆண்டு ஜூலை மாதம் 15-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.